

கலைஞர் அவர்களின் உயிரோடும், உணர்வோடும் கலந்த நம் அண்ணா அறிவாலயத்தில், அண்ணா கலைஞர் திருவுருவச்சிலைகளுக்கு அருகே வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்துக்கு கழக நிர்வாகிகளுடன் இணைந்து கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.



பல்வேறு காலகட்டங்களில் இந்திய ஒன்றியத்தின் அரசியல் போக்கை தீர்மானித்த கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்தில், கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவருடைய திருவுருவப்படத்திற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

# ரூ 10.27 கோடியில் உயர்தர புற்றுநோய் சிகிச்சைக் கட்டிடம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஆக.9-

முதலமைச்சர் அவர்களின் வழி காட்டுதலின்படி, கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்2023 பதிவுத்தொகை மற்றும் அரசு நிதி பங்களிப்பு சேர்த்து ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் உயர்தர புற்றுநோய் சிகிச்சை கட்டடம் அடிக்கல் நாட்டுதல் ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனையில் புதிய கட்டிடம் திறந்து வைத்தல் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தல் உள்ளிட்டவைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மருத்துவக்கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை, அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை மற்றும் இராயப்பேட்டை அரசு பொதுமருத்துவமனையில்நேற்று முன்தினம் (07.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மருத்துவக் கட்டிடம் திறந்து வைத்து, மருத்துவ உபகரணங்களை வழங்கி, புதிய மருத்துவக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

**அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை**

202021 நிதிநிலை அறிக்கையில் அறிவித்த அறிவிப்பின்படி, ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் 4ஆம் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அறுவை சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைக்குப்பின் கண்காணிப்பு அறை, அதிதீவிர சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவை 25,000 சதுர அடியில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிகழ்வில் இன்போசிஸ் நிறுவனம் CSR நிதியின் கீழ் ரூ.30 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கியுள்ளது. அதில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகணரங்கள் அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனைக்கும், ரூ.10 கோடி மதிப்பீட்டிலான மருத்துவ உபகரணங்கள் சென்னை, இராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் – 2023**

இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய புதிய 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் தரைதளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டவை 62,700 சதுர அடி பரப்பில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்-2023 மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்களின் சீரிய முயற்சியின் காரணமாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ந் தேதி நடைபெற்று 73,000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கின்னஸ் சாதனையாக உருபெற்றது. இந்நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த பதிவுத்தொகை ரூ.3,42,50,000 மற்றும் அரசு பங்களிப்பு நிதியாக நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.6,85,00,000 மொத்தம் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் உயர்தர புற்று நோய் சிகிச்சை மையம் தரைத்தளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டு 62,700 சதுர அடி பரப்பளவில் தரைத்தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, முதல் தளத்தில் உள்நோயாளிகள் பிரிவு, இரண்டாம் தளத்தில் நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கங்கள், அறுவை சிகிச்சைக்கு முந்தைய அறை, மீட்பு அறை, தீவிர சிகிச்சை பிரிவு போன்ற வசதிகளுடன் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். ப்ரியா, மத்திய சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவமனைக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் (பொ) மரு.சுமதி, இன்போசிஸ் நிர்வாகிகள் திருமதி.உமாதேவி, சூர்யா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை! திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில்

# ரூ.3.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வணிக வளாகங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.9-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (07.08.2024) சென்னை, திருவல்லிக்கேணியில், பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.3.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு புதிய வணிக வளாகங்களை திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருவதோடு, திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டும் வகையில் அவற்றிற்கு சொந்தமான இடங்களில் வணிக வளாகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், பக்தர்கள் தங்கும் விடுதிகள் போன்றவை கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2021 2022 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பில், "சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 18 இடங்களில் உள்ள சிதிலமடைந்த வாடகைக் குடியிருப்புகளை அகற்றி விட்டு புதிய வணிக வளாகம், குடியிருப்புகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் ரூ. 3.22 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் மற்றும் பொன்னப்பன் சந்தில் ரூ.19.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் என மொத்தம் ரூ.3.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு வணிக வளாகங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து, குத்து விளக்கு ஏற்றினார். இவ்விழாவிற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ஏஆர்பி.எம்.காமராஜ், திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசியல் ரீதியாகவோ அல்லது ஏதாவது சதி நடந்திருக்கலாமோ என்று சந்தேகம்!

# ஒலிம்பிக்கில் வினேஷ் போகத்தின் தங்க வாய்ப்பு தகர்ந்தது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஆக. 9-

ஒலிம்பிக்கில் வினேஷ் போகத்தின் தங்க வாய்ப்பு தகர்ந்தது. அரசியல் ரீதியாகவோ அல்லது ஏதாவது சதி நடந்திருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்துள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

இதுகுறித்து 8.8.2024 தேதிய 'தினகரன்' தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-



தினகரன்

தங்க வாய்ப்பு தகர்ந்தது

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 33வது ஒலிம்பிக் போட்டி கடந்த ஜுலை 26ம் தேதி துவங்கியது. உலக விளையாட்டுகளின் திருவிழாவாக போற்றப்படும் ஒலிம்பிக்கில் இம்முறை 205 நாடுகளில் இருந்து 10,500 வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்திய அணி சார்பில் நீரஜ் சோப்ரா, வினேஷ் போகத், மனு பாகர், தீபிகாகுமாரி, லக்சயா சென், போபண்ணா உட்பட 117 பேர் கலந்து கொண்டனர். ஒலிம்பிக்கில் இம்முறை மல்யுத்தம், துப்பாக்கி சுடுதல், பேட்மின்டன் போன்ற பிரிவுகளில் தங்கம் அல்லது வெள்ளிப்பதக்கங்களை நமது வீரர்கள் வெல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. துப்பாக்கி சுடுதல் பிரிவில் வீராங்கனை மனு பாகர் வெண்கலம் வென்று, இந்தியாவின் பதக்க வாசலை திறந்து வைத்தார். இந்தியா இதுவரை 3 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளது. ஒருவராவது தங்கம் வெல்ல மாட்டாரா என்பது பல கோடி இந்திய மக்களின் கனவாக இருந்து வந்தது. இந்த சூழலில், இந்தியா தங்கம் வெல்வதற்கான பிரகாச மான வாய்ப்பை, மல்யுத்த போட்டியில் பெண்களுக்கான 50 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற வினேஷ் போகத் உறுதி செய்தார்.

அரையிறுதிப் போட்டியில் இவர், கியூபாவை சேர்ந்த நம்பர் ஒன் வீராங்கனையான யூஸ்னிலிஸ் குஸ்மேனை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றார். நம்பர் ஒன் வீராங்கனையை வீழ்த்தியதன் மூலம் தங்கத்தை தட்டிச் செல்வார்; தவறினாலும் வெள்ளி உறுதி என்ற நிலை இருந்ததால், வினேஷ் போகத்துக்கு இந்திய ரசிகர்கள் பாராட்டுகளை தெரிவித்த வண்ணம் இருந்தனர். அதே நேரம் இது விளையாட்டு போராட்டத்துக்கான வெற்றியாக மட்டும் மக்கள் பார்க்கவில்லை. காரணம், கடந்தாண்டு தங்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக இந்திய மல்யுத்த சம்மேளன தலைவரும், அப்போதைய பாஜ எம்பியுமான பிரிஜ் பூஷண் சரண்சிங் மீது, இந்திய மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்ஷி மாலிக் உள்ளிட்டோர் புகார் தெரிவித்தனர். ஒன்றிய பாஜ அரசு இந்த விவகாரத்தை மூடி மறைக்க முயல்வதாக கூறி, வீராங்கனைகள் வீதிக்கு வந்து போராட்டம் நடத்தினர். இந்த விவகாரம் நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த ரணத்துக்கு மருந்தாகவும், ஒன்றிய அரசின் போதிய ஒத்துழைப்பு இல்லாத சூழலிலும், ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு மிகப் பெரிய பெருமையை தேடித் தந்தார் வினேஷ் போகத். ஆனால், அந்த மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்காததுதான் அவரது துரதிருஷ்டம்.

நேற்றைய இறுதிப்போட்டிக்கு முன்னதாக அவரது எடை பரிசோதிக்கப்பட்ட போது, 50 கிலோ எடையுடன் 100 கிராம் கூடுதலாக இருந்ததாக கூறி, அவரை தகுதி நீக்கம் செய்வதாக சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பு அறிவித்து, இந்திய மக்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. முன்னதாக, அரையிறுதிப் போட்டி முடிந்த பின், எடையை வினேஷ் போகத் பரிசோதித்துள்ளார். அப்போது எடை கூடுதலாக இருந்துள்ளது. இதனால் விடிய, விடிய கடும் உடற்பயிற்சிகளை மேற்கொண்டதாகவும், அப்படியும் எடை அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. லீக் முதல் அரையிறுதிக்கு முன் வரை 50 கிலோக்குள் இருந்த எடை திடீரென அதிகரித்தது எப்படி? இந்த விஷயத்தில் ஏதேனும் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு ஏதாவது சதி நடந்திருக்கலாமோ என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. இந்திய வீரர்கள், வீராங்கனைகள் வரலாற்று வெற்றியை நோக்கிச் செல்லும்போதெல்லாம் சர்ச்சை எழுவது வழக்கமாகவே உள்ளது. அன்று பாலியல்ரீதியாக பாதிக்கப்பட்ட வீராங்கனை களை, இன்று மன உளைச்சலில் ஆளாக்கியிருக்கிறது சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பு. இதற்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள் தங்களது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தென்காசி நகரக் கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் - அமைதிப் பேரணி!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில்!

தென்காசி.ஆக.9.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி நகர கழகம் ஏற்பாட்டில் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தல் முன்னிட்டு

அமைதி பேரணி தென்காசி காந்தி சிலை முன்பு இருந்து தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நகர செயலாளர் சாதிர் முன்னிலையில் நடைபெற்றது.பேரணி ரதவீதி சுற்றி வந்து காந்தி சிலை முன்பு வந்து நிறைவடைந்தது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம்,மாநில விவசாய இணை செயலாளர் அப்துல் காதர், மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, கென்னடி,பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஷேக் தாவுது,ஆறுமுகச்சாமி, சேசு ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் சாமிதுரை, ரஹீம், ராஜேஸ்வ ரன், ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், வல்லம் திவான் ஒலி,ஜெயக்குமார்,மகேஷ் மாயவன், சீனித்துரை, ரவி சங்கர், சிவன் பாண்டியன், பேரூர் செயலாளர்கள் குட்டி என்ற சங்கர், சுடலை, முத்தையா, பண்டாரம், முத்து, உசேன், தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, துணைத் தலைவர் கனகராஜ், கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வேலுச்சாமி, கோமதிநாயகம்,கருப்பணன், இஞ்சி இஸ்மாயில்,திவ்யா மணிகண்டன், சங்கீதா, இசக்கிபாண்டியன்,வீராணம் சேக்முகமது, ரமேஷ், துணை அமைப்பாளர்கள் ரகுமான் சாதத், பாலாமணி, ராஜேந்திரன், செந்தூர் பாண்டியன்,தங்கப்பாண்டியன் சங்கரன் வாத்தியார், பரமசிவன், வேலுச்சாமி,பாண்டி,சண்முகநாதன், ஜீவானந்தம், அழகு தமிழ், முத்து சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றிய செயலாளர் ராமையா, மாவட்ட பிரதிநிதி ரகுமத்துல்லா,செல்வம், சுந்தரம்,கழக பேச்சாளர்கள் இஸ்மாயில், மாரியப்பன், முத்துவேல், நகர நிர்வாகிகள் கிட்டு, சேக் பரித், ராமதுரை, பால்ராஜ்,மைதீன், பிச்சை, மாரிமுத்து, கங்காதரன் உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி நகராட்சி பகுதிகளில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டின் நிதி 2022–2023, மற்றும் 2023–2024 கீழ் தலா 10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 4 புதிய நியாய விலைக் கடைகளை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி வடக்கு நகர கழகச் செயலாளர் நகர மன்ற உறுப்பினர் ஜீவரத்தினம் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எம்.டி.அருளானந்த், நகர் பொருளாளர் ஜானகிராமன்,நகர்மன்ற உறுப்பினர்கள் ஷர்மிளா,அக்பர் அலி, துர்கா நந்தகுமார், சுகன்யா மணீஸ்குமார், ராதா பூசத்துறை, கிட்டு, லண்டன் ரமேஷ், மாரியம்மாள் மும்மூர்த்தி, பிரபா சாலமன், கிருஷ்ணவேணி பழனிகுமார், தனலட்சுமி ராஜு, அப்துல் மாலிக், கனிமொழி துரைமுருகன், மாரியம்மாள் கருப்பையா, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கருப்பையா வட்ட வழங்கல் அலுவலர் கீதா, தனி வருவாய் அலுவலர் கார்த்திக், மற்றும் வார்டு செயலாளர். வார்டு பிரதிநிதிகள். கழக நிர்வாகிகள். பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சை மாவட்ட 'முரசொலி' செய்தியாளர் வீ.சரவணன் தந்தையார்

# ச.வீரமணி படத்திறப்பு நிகழ்ச்சி!

## சு.கல்யாண சுந்தரம் எம்.பி. திறந்துவைக்கிறார்!

தஞ்சாவூர்,ஆக. 9-

தஞ்சாவூர் மாவட்ட முரசொலி நிருபர் வீ.சரவணன் அவர்களின் தந்தையார் மறைந்த ச.வீரமணி அவர்களின் படத்திறப்பு விழா 11.08.2024 ஞாயிறு அன்றுகாலை கும்பகோணம் அசூர் பைபாசில் உள்ள மீரா கார்டன் ராஜ் அப்பார்ட்மெண்டில் நடைபெறுகிறது.

மறைந்த ச.வீரமணி அவர்களின் திருஉருவப் படத்தை மாவட்டக்கழக செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார். மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ,தலைமை செயற்குழு உறுப்பினர் செ.ராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மாநகர செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் எஸ்.கே.முத்து செல்வம், தெற்கு மாவட்ட செயலாளர் கா.அண்ணா துரை, சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அசோக்குமார், மாநகர மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணா மூர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்கின்றனர்.



தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு புளியங்குடி நகர கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணி தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.உடன் சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. பொன்.முத்தையாபாண்டியன், பெரியதுரை, டாக்டர் செண்பக விநாயகம், இல.சரவணன், அந்தோணிசாமி, பிரகாஷ், விஜயா, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.பேரணி டி.என்.புதுக்குடி காந்தி சிலையை அடைந்ததும் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.